23rd July 1962]

திரு. கே. டி. கோசல்ராம் : அந்த அறிக்கை வைக்கப்படவில்லை, இப்போது. அந்த அறிக்கையை வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த கேள்விக்காக சமர்ப்பிக்க முடியாது. இதற்கு தனியாக கேள்வி வேண்டும்.

திரு. கே. மூக்கையா தேவர் : இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து வருகிறவர்களுக்கு, அவர்கள் இன்னின்னது தேவை என்று சொன்ன பிறகுதான் நிவாரணம் கொடுக்கப்படுகிறது. அப்படி வருகிறவர்களுக்கு பொதுவாக நிவாரண வேலைத் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி பொதுவாக கொடுக்க முடியாது. யார் யார் என்னென்ன வேலைகளுக்கு அருகதை என்று தெரிந்து கொள்ளவேண்டும். வந்திருக்கிறவர்கள் தங்களுக்கு என்ன வேண்டுமென்று முதலில் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

*** 556 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்பும் இந்த ராஜ்யப் பிரஜைகளுக்குச் சுங்க இலாகாவினுல் ஏற்படும் கஷ்டங்கள் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

(இ) அப்படியானல், அவைகளைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. S. SELVARAJAN : Are this Government aware of the fact that persons leaving Ceylon and coming to India, their native lands are teased more by our Excise Officers than Excise Officers in Ceylon?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்திற்கு வந்திருக்கிற புகார்கள் எல்லாம் மத்திய அரசாங்க பரிசிலனைக்கும், வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. கே. மூக்கையா தேவர் : இதுவரை இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து வந்திருக்கிறவர்கள் எவ்வளவு பேர்கள் ? அவர்களின் கோரிக்கைகள் என்ன ? என்னென்ன வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனி கேள்வி வேண்டும்.

*** 557 கேள்வி.—திரு எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இலங்கையில் இரண்டு வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த வகுப்பு, மொழி கலகங்கள் காரணமாக இலங்கையில் வர்த்தகம்

செய்துவந்த இந்த ராஜ்யப் பிரஜைகளுக்கு ஏற்பட்ட பெருவாரி யான கஷ்ட நஷ்டங்களுக்கு நிவாரணம் கோரி மனுக்கள் வந்தனவா ?

(இ) அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள் ளப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சர்வதேச சட்டப்பிரகாரம் இதற்குரிய பரிகாரம் தேடவேண்டுமென்று முன்பு ஒரு தரம் இந்த சபையில் கனம் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொன்னது ஞாபகம் இல்லையா ? அது பரிசீலிக்கப்பட்டு பல கோடி ரூபாய் நஷ்டப்பட்டிருக்கும் இந்தியர்களுக்கு சர்வதேச சட்டப் பிரகாரம் ஏதாவது பரிகாரம் மத்திய அரசாங்கம் மூலம் செய்ய இந்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அரசாங்கம் செய்யக் கூடியதல்ல இது. அரசாங்கத்திற்கு வந்திருக்கும் தகவல்கள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

Water works work-establishment staff (Kanyakumari district)

* 558 *Q.*—SRI R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any letter has been received from Nagercoil Municipality regarding the arrear claims of Water works work-establishment staff (transferred personnel from T.C. State) in 1960: and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No such letter has been received by the Government, but the Inspector of Municipal Councils and Local Boards has received it.

(*b*) The Inspector of Municipal Councils and Local Boards has instructed the Municipal Commissioner to allow the transferred staff the advantage of the revision of scales of pay which the Travancore Government made in October 1956

பஞ்சாயத்து வரி வசூல் செய்தல்

* 559 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராம அதிகாரிகள் தக்காவிக் கடன் வசூலிப்பதற்காக ஊதியம் பெறுவதுபோல், பஞ்சாயத்து வரி வசூல் செய்வதற்கும் ஊதியம் கொடுக்க ஏதேனும் உத்தேசமுண்டா ?

(இ) இல்லையென்றால், ஏன் ?